# உலக நாடுகளில் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம்: இலங்கையை சிறப்பாகக் கொண்டதோர் ஆய்வு

அ. கண்ணேராஜ்
சமூக விஞ்ஞானங்கள் துறை, கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
a.kanneraj@yahoo.com

***ஆய்வுச் சுருக்கம்***

*சனத்தொகையில் அரைப்பங்கினரை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பெண்களின் பங்களிப்பு இன்றி தீர்மானம் மேற்கொள்வதும், அதனை நடைமுறைப்படுத்துவதும் ஜனநாயகம் ஆகாது. உண்மையில், சமகால இலங்கை அரசியலின் நிலையும் இதுவே. இவ்விடயம் தொடர்பில் இரு தசாப்தங்களுக்கு முன்னர் உலகநாடுகளின் அனுபவமும் ஏறக்குறைய இவ்வாறனதாகவே இருந்தது. ஆயினும் பல நாடுகள் விழித்துக்கொண்டன. துரிதமாகச் செயற்பட்டன. அதனடிப்படையில் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை அதிகரித்தும் கொண்டன. ஆயினும், இலங்கையில் இம்மாற்றம் ஏற்படவில்லை. இப்பின்னணியில், பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பது தொடர்பில், உலக நாடுகள் எத்தகைய வழிமுறைகளைக் கையாண்டிருந்தன என்பதனை ஆய்விற்கு உட்படுத்தி, இலங்கையில் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை எவ்வகையில் அதிகரிக்க முடியும் என்பதனை இவ்வாய்வு முன்மொழிகின்றது.*

***திறவுச் சொற்கள்:*** *பெண்கள், அரசியல் பிரதிநிதித்துவம், சர்வதேச நாடுகள், இலங்கை, பொறிமுறை*

## 1. அறிமுகம்

1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பில், இலங்கை ஒரு ஜனநாயக சோசலிச குடியரசு என குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு குறிப்பிடப்படும் ஜனாநாயக அரசியல் முறைமை என்பதற்குள் பால்நிலை சமத்துவமும் உள்ளடங்கும். தவிர, 1979 இல் கொண்டுவரப்பட்ட பெண்களுக்கு எதிரான அனைத்து பாரபட்சங்களையும் இல்லாதொழிப்பதற்கான சர்வதேசப் பிரகடனத்திலும் இலங்கை கைச்சாத்திட்டிருந்தது. இலங்கையின் சனத்தொகையில், 52 வீதமானவர்கள் பெண்களாகக் காணப்படுகின்றனர். ஆயினும், பாராளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் 6 வீதத்திற்கும் குறைவானதாகவே உள்ளது. இது உலக சராசரியான 23 வீதத்திலும் மிகக் குறைவானதாகக் காணப்படுகின்ற அதேவேளை, தெற்காசிய நாடுகளுடன் ஒப்பிடுகையிலும் இலங்கையில் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் குறைந்த மட்டத்திலேயே உள்ளது. இதனடிப்படையில், இதற்கான காரணங்களை இலங்கையுடன் ஏனைய நாடுகளுடன் ஒப்பீடு செய்து முடிவுகளை முன்வைக்க இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 2. ஆய்வுப்பிரச்சினை

இலங்கை பிரித்தானியர் காலணித்துவத்திற்குள் உட்பட்டிருந்த காலத்தில், 1931 ஆம் ஆண்டு இரு பாலாரினருக்கும் வாக்களிக்கின்ற உரிமை வழங்கப்பட்டிருந்தது. இப்பின்னணியிலே, உலகத்தில் முதல் பெண்பிரதமர், இலங்கையிலிருந்து தெரிவு செய்யப்பட்டிருந்தார். இலங்கையின் மொத்த சனத்தொகையில் 51.89 வீதம் (2016, உலக வங்கி) பெண்களாகும். இருப்பினும், இலங்கையில் தற்போதும் பாராளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் 6 வீதத்திற்கும் குறைந்த மட்டத்திலேயே உள்ளது. பாராளுமன்றத்திற்கான பெண்களின் பிரதிநிதித்துவத்தினை அடிப்படையாகக் கொண்ட தரவரிசைப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள 193 நாடுகளில், இலங்கைக்கு 180ஆவது (01.07.2018 புள்ளிவிபர அடிப்படையில்) இடமே கிடைத்துள்ளது. பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் தொடர்பில், சார்க் நாடுகளுடன் ஒப்பிடுகையிலும், இலங்கை பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. இலங்கையில், பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தைப் பாதிக்கின்ற காரணிள் என்ன? இத்தகைய பிரச்சினைகளை எதிர்நோக்கிய உலகநாடுகள் எத்தகைய பொறிமுறையின் அடிப்படையில், இவ்விடயத்தைக் கையாண்டனர் என்பதனை ஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 3. ஆய்வின் நோக்கம்

பெண்களின் அரசியல் பிரதிநிதித்தவம் தொடர்பில், இலங்கையினை சர்வதேச நாடுகளுடன் ஒப்பீட்டு அடிப்படையில் நோக்குவது.

பின்னடைவிற்கான காரணங்களையும், முன்னணிவகிக்கின்ற நாடுகளில் உள்ள சாதகமான அமசங்கள் எவை என்பதனையும் அறிதல்.

## 4. ஆய்வு முறையியல்

### i. தரவு மூலங்கள்

இவ்வாய்வானது கலப்பு ஆய்வு முறையியல் அணுகுமுறையியை (அளவுசார் மற்றும் பண்புசார்) அடிப்படையாகக் கொண்டது. இவ்விரு வகையான தகவல்களும் இரண்டாம் நிலைத் தரவு மூலங்களில் இருந்து பெறப்பட்டுள்ளன.

### ii. இரண்டாம் நிலைத் தரவுகள் சேகரிப்பு

இரண்டாம் நிலைத் தரவுகள், நூல்கள், ஆய்வு அறிக்கைகள், புள்ளி விபரங்கள், ஆவணங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் மூலம் பெறப்படவுள்ளன. மேற்குறித்த இரண்டாம் நிலைத் தரவுகள், பிரசுரிக்கப்பட்ட புத்தகங்கள் மற்றும் அரசாங்க வெளியீட்டு ஆவணங்களில் இருந்தும், கணனி வலைத் தளங்களில் இருந்தும் பெறப்பட்டுள்ளன.

## 5. கோட்பாட்டு விளக்கம்

இன்று உலகளவில் முக்கியமாக பெண்ணியவாதம் (பெண்களின் விடயம் தொடர்பில், பெண்ணின் நிலையிலிருந்து கருத்துக்களும் வாதங்களும் வருவது பெண்ணிலை வாதம்) அல்லது பெண்களின் உரிமைகள் மற்றும் ஆண், பெண் சமத்துவம் தொடர்பாக பரவலாகப் பேசப்படுகின்றது. இவ்விடயமானது மேற்கத்தைய நாடுகளைப் பொறுத்தவரையில் சற்றுப் பழமையான விடயமாக இருந்தாலும் மூன்றாம் உலக நாடுகளைப் பொறுத்தவரையில் ஆண், பெண் சமத்துவம் என்பது இன்னும் புதுமையானதாகவே உள்ளது. அதேவேளை, பெண்கள் உரிமை தொடர்பான விடயங்கள் சமூகத்திற்கு சமூகம், நாட்டிற்கு நாடு மாறுபடுவதையும் காணலாம்.

1931ம் ஆண்டு இலங்கையில் சர்வஜன வாக்குரிமை அறிமுகப்படுத்தப்பட்டபோது, அது ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஏக காலத்தில் வழங்கப்பட்டது. ஆங்கிலேயரின் காலனித்துவத்தின்கீழ் இருந்த நாடுகளில் முதன் முதலில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்ட நாடு இலங்கையாகும்.

சனத்தொகையில் 52 வீதத்தினைக் கொண்ட பெண்கள் அரசியல் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக் கொள்ளுதல் என்பது தவிர்க்கப்பட முடியாத ஒரு விடயமாகும். ஏனெனில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் தொடர்பிலான கொள்கை உருவாக்கம், அமுலாக்கம் என்பனவற்றிற்கு அரசியலில் பெண்கள் பிரதிநிதித்துவம் இன்றியமையாததாகும்.

பொதுவாக, ஜனநாயக நாடுகளின் அரசியலமைப்பில், மனித உரிமை என்பது தவிர்க்கப்பட முடியாது அம்சம். இம்மனித உரிமையில், ஆண் மற்றும் பெண் சமத்துவம் பேணல் என்பது அத்தியவசியமானது. மனித உரிமைகளில், அரசியல் உரிமை மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதது என்பதை இலங்கையின் இரண்டாம் குடியரசு அரசியலமைப்பும் உறுதிப்படுத்தியுள்ளது. இவ் அரசியல் உரிமைக்குள், வாக்களித்தல், பிரதிநிதித்துவம், தேர்தல் நடவடிக்கையில் பங்குபற்றுதல், அரசியல் கட்சிகளை உருவாக்குதல், அதனுடன் இணைந்து செயற்படுதல், அரசாங்கத்தை விமர்சித்தல், தீர்மானம் எடுத்தலில் நேரடியாக அல்லது மறைமுகமாகப் பங்குபற்றுதல் என்பன ஆண் பெண் அல்லது வேறெந்த வேறுபாடுகளுமின்றி குடிமக்களுக்குச் சமமாகக் கிடைப்பதை உறுதிப்படுத்துவதாகும் (லியனகே கமலா, 2012).

நாட்டின் அரசியல் உள்ளிட்ட பொதுச் செயற்பாடுகளில், பெண்களை அல்லது ஆண்களை தவிர்த்து, ஒரு பாலாருக்கு மாத்திரம் வாய்ப்பு வழங்கப்படுமானால், அதன்போது பிரச்சினைகள் ஏற்படும் (Panandiker, 2000). மேற்படி Panandiker இன் ஆண் பெண் சமத்துவமான வாய்ப்பு தொடர்பான கோட்பாடே ஆய்விற்குப் பயன்படுத்தப்படுகின்றது.

## 6. ஆய்வின் முடிவும் பகுப்பாய்வும்

இவ்வாய்வானது, பாராளுமன்றத்தில் பெண்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு உலக நாடுகளைத் தரப்படுத்துகின்ற (Woman in National

Parliament – updated 01.07.2018) அட்டவணையினை அடிப்படையாகக் கொண்டது. இதில் குறிப்பாக உலகில் குறித்த அட்டவணையில் முன்னணியில், பின்நிலையில், தெற்காசியா மற்றும் இலங்கை போன்ற நாடுகளின் நிலை தொடர்பிலும் இதற்கான காரணங்கள் தொடர்பிலும் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு, இலங்கை அரசியலில் பெண்களின் நிலை தொடர்பில் ஆய்வு செய்யப்பட்டு பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அரசியலில் பெண்களின் பங்களிப்பு தொடர்பில் இரு விடயங்களைத் தெளிவுபடுத்த வேண்டும். ஒன்று: மொத்த சனத்தொகையில் அரைப் பங்கினர் பெண்களாக இருப்பது போன்று, அரசியலிலும் அவர்களின் பங்களிப்பு இருக்க வேண்டும். மற்றையது, பெண்களின் தேவை, உணர்வு அடிப்படையில் ஆண்களைவிட வித்தியாசமானவர்கள். எனவே தீர்மானமெடுத்தலிலும், அதனை நடைமுறைப்படுத்துவதிலும் அவர்களின் பங்களிப்பு அவசியம். பெண்களின் அரசியல் பங்குபற்றுதல் உறுதிப்படுத்தப்படும்போதே ஒரு நாட்டின் நிலையான அபிவிருத்தி சாத்தியமாகும். ஏனெனில், ஒரு நாட்டின் சமூகப் பொருளாதார அபிவிருத்தி என்பது தீர்மானம் மேற்கொள்ளலிலும், அதனைச் செயற்படுத்தலிலும் பெண்களின் பங்களிப்பு இன்றி சாத்தியமாகாது. ஆயினும் இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில், பெண்களின் சமத்துவமான அரசியல் பிரதிநிதித்துவம் பாரியதொரு பிரச்சினையாகவே நோக்கப்படுகின்றது.

21 ஆம் நூற்றாண்டில், 95 வீதமான நாடுகள் பெண்களுக்கு இரு அடிப்படை உரிமைகளை வழங்கியுள்ளன. அவையாவன வாக்களிக்கும் உரிமை மற்றும் தேர்தலில் பங்குபற்றும் உரிமை என்பனவாகும். உலகத்தில் பெண்களுக்கு முதலில் வாக்களிக்கும் உரிமை வழங்கிய நாடு நியுசிலாந்து (1893) ஆகும். ஆயினும் இன்னும் சில நாடுகள் இவ்வுரிமையை வழங்காமலும் உள்ளன. வாக்களிக்கும் உரிமையை உலகில் பலநாடுகள் வழங்கியிருந்தாலும், அது பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்காது. காரணம், தேர்தலில் போட்டியிடுகின்ற அநேக வேட்பாளர்கள் ஆண்களாகும்.

1995ஆம் ஆண்டுகளில் இருந்து 30 வீதமான பெண்கள் அரசியல் பிரதிநிதுத்துவத்தைப் பெறவேண்டும் என்பது ஊக்குவிக்கப்பட்டது. இதன் விளைவாகவே பெண்களுக்கான கோட்டாமுறைமை உலக நாடுகளில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது.
இப்பின்னணியில், பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் தொடர்பில் கவனம் செலுத்துகின்ற போக்கு உலக நாடுகளிடையே அதிகரித்திருந்தது. இப்பின்னணியிலேயே, பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம், எந்தவொரு குறிப்பிட்ட நாட்டிலும் பெண்களின் நிலையை அளவிடுவதற்கான முக்கிய அளவுகோலாக சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது (Cooper Jane Sarah ,2016). ஆயினும், இன்றும், உலகில் பெரும்பாலான நாடுகளில், அரசியல் ஆண்கள் சார்ந்ததொரு துறையாகவும், ஆண்களால் ஆதிக்கம்

செலுத்தப்படுகின்றதொரு துறையாகவுமே நடைமுறையில் அவதானிக்கப்படுகின்றது.

இந்நிலைமையினைத் தெற்காசிய நாடுகளுடன் ஒப்பீட்டுப் பார்ப்போமாயின், குறித்த தரப்படுத்தலில்

அட்டவனை: 01

| இல | நாடுகள் | உலக நாடுகளிடையேயான நிலை | தெற்காசியாவில் நிலை |
|---|---|---|---|
| 01 | நேபாளம் | 37 | 01 |
| 02 | ஆப்கானிஸ்தான் | 55 | 02 |
| 03 | பர்கிஸ்தான் | 93 | 03 |
| 04 | வங்களாதேஷ் | 95 | 04 |
| 05 | இந்தியா | 147 | 05 |
| 06 | பூட்டான் | 170 | 06 |
| 07 | மாலைதீவு | 179 | 07 |
| 08 | இலங்கை | 180 | 08 |

மூலம்: Woman in Parliament 2018

இத்தரப்படுத்தலில் சில மேற்கத்தைய நாடுகளின் நிலையினை ஒப்பீட்டுப்பார்த்தால்

அட்டவனை: 02

| இல | நாடுகள் | உலக நாடுகளிடையேயான நிலை | நிலை |
|---|---|---|---|
| 01 | பிரித்தானியா | 41 | 01 |
| 02 | அமெரிக்கா | 102 | 02 |

மூலம்: Woman in Parliament 2018

இத்தரப்படுத்தலில் சில ஆபிரிக்க நாடுகளின் நிலையினை ஒப்பீட்டுப்பார்த்தால்

அட்டவனை: 03

| இல | நாடுகள் | உலக நாடுகளிடையேயான நிலை | நிலை |
|---|---|---|---|
| 01 | ருவண்டா | 01 | 01 |
| 02 | தென்னாபிரிக்கா | 10 | 02 |

மூலம்: Woman in Parliament 2018

மேற்படி தரவுகளின் அடிப்படையில் பார்க்கின்றபோது, சார்க் நாடுகளிடையே

இலங்கை எட்டாவது ஸ்தானத்தினையும், உலகநாடுகளிடையே மிகப்பெரிய ஜனநாயகக் கூறப்படும் இந்தியா 05ஆவது

இடத்தினையும், இறுக்கமான முஸ்லீம் கலாசாரத்தைப் பேணுகின்ற ஆப்கானிஸ்தான் 02ஆவது இடத்தினையும் பெற்றுள்ளமையினையும் காணலாம்.

அட்டவனை 02 இல், உலகத்தில் ஜனநாயகத்தின் காவலனாகத் தன்னை நிலைநிறுத்திக் காட்டும் அமெரிக்கா உலக நாடுகளிடையே 102 ஆவது இடத்தினையும், பின்தங்கிய கலாசாரம், பாரம்பரிய நாடுகளாக அடையாளப்படுத்தப்படும் ஆபிரிக்க நாடுகளான ருவண்டா பட்டியலில் முதலிடத்தினையும், நிறப் பாகுபாட்டில் இருந்து விடுதலை பெற்ற தென்னாபிக்கா 10 ஆம் இடத்தினையும் பெற்றுள்ளமையினைக் காணலாம்.

பிரித்தானிய காலனித்துவத்திற்கு உட்பட்டிருந்த நாடுகளில் முதன் முதலில் பெண்ளுக்கு வாக்குரிமை வழங்கப்பட்ட நாடு இலங்கையாகும். மட்டுமன்றி, கலாசார மற்றும் பண்பாட்டு அடிப்படையில் நோக்கினாலும், இப்பிராந்திய நாடுகளிடையே ஏறக்குறைய ஒரே மாதிரியான அம்சங்களே நடைமுறையில் பின்பற்றப்படுகின்றன. மதரீதியாகப் பெண்களை, அரசியல் ரீதியாக ஊக்குவிக்காத நாடுகளும் இப்பிராந்தியத்திலும் சர்வதேச ரீதியாகவும் (சவூதி அரேபியா – 100, இந்தோனேசியா – 101) இலங்கையைவிட முன்னணி வகிக்கின்றன (2017, Chalaby Odette).

இப்பட்டியலில் முதலாம் இடத்தில் உள்ள ருவண்டாவில் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் தொடர்பில் சாதகமாகக் காணப்படுகின்ற அம்சங்கள் என்ன? என்பது தொடர்பில் அவதானம் செலுத்துவோமாயின், ருவண்டாவில், 1994 இனப்படுகொலை இடம்பெற்றது. இதில் எட்டு இலட்சத்திற்கும் அதிகமான ருஷ்டி இனத்தினர் கொல்லப்பட்டனர் (2016, Cooper Jane Sarah). இனப்படுகொலையில் இளைஞர்களும், ஆண்களும் குறிவைக்கப்பட்டமை காரணமாக பெண்களின் விகிதாசாரம் 70 வீதமாக உயர்ந்திருந்தது. எவ்வாறாயினும் இன்று பெண்களின் விகிதாசாரம் 56 ஆகும் (2016, Cooper Jane Sarah). இருப்பினும், படுகொலைக் காலத்தில் பெண்களின் சமூகப்பங்களிப்பு எவ்வாறு இருந்ததோ அதனை அவர்கள் கைவிடவில்லை. தவிர பெண்களின் அரசியல் ஆர்வமும் வளர்ச்சியடைந்திருந்தது. இதனால் பெண்கள் அமைப்புக்களின் தோற்றமும். சிவில் சமூகத்தில் அவர்களின் பங்களிப்பும் காத்திரமான இடத்தை வகித்திருந்தன. ருவண்டா ஒரு சர்வதிகர சமூகமாக இருந்தாலும், அரசியலில் பெண்களின் பங்களிப்பு அதிகரித்தே வந்திருந்தது.

அட்டவனை: 04

| இல | ஆண்டு | பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் |
|---|---|---|
| 01 | 1994 | 11.4 |
| 02 | 1997 | 17.1 |
| 03 | 2000 | 25.7 |
| 04 | 2003 | 48.75 (புதிய அரசியல் யாப்பில் 30 வீதம் கோட்டா அறிமுகம்) |

மூலம்: Inter- Parliamentary Union. Data as 01.07.2018

இன்று உலகில் அதிக பெண் பிரதிநிதித்துவம் உள்ள நாடாக ருவண்டா காணப்படுகின்றது. அதேவேளை பெண்களின் பிரதிநிதித்துவ விகிதாசாரம் விரைவாக அதிகரித்தது. மட்டுமன்றி 50 வீதம் பெண்களுக்கான பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை அடைந்த நாடகவும் ருவண்டா தன்னை நிலைநிறுத்தியது.

தென்னாபிரிக்கா இத்தரவரிசையில் 10 ஆம் இடத்தில் உள்ளது. இந்நாடு 1994இல் சுதந்திரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர், 2.7 வீதமான பெண்களே பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக்கொண்டனர். ஆயினும், தற்போது உள்ள நிலையில் 41 வீதமான பெண்கள் பாராளுமன்றப் பிரதிநிதித்துத்தைப் பெற்றுள்ளனர் (2016, Tiainen). இம்மாற்றம் தொடர்ச்சியாக இடம்பெற்ற கொள்கை மாற்றம் மூலம் சாத்தியமாகியது. இதன் ஆரம்பம் சர்வதேச ரீதியாகப் பாராட்டப்பட்ட அரசியலமைப்பின் மூலம் தொடங்கப்பட்டது. இதனடிப்படையில் பெண்கள், உரிமைகள் யாப்பில் சேர்க்கப்பட்டு உறுதி செய்திருந்தனர். இப்புதிய அரசியல் யாப்பு, பெண்களின் பல சர்சைக்குரியதாக இருந்த உரிமைகளுக்கு அங்கீகாரமளித்திருந்தது. குறிப்பாக, சமத்துவத்திற்கான உரிமை, சுதந்திரம் மற்றும் பாதுகாப்பு உரிமை, இனப்பெருக்க விடயங்களில் தீர்மானமெடுக்கும் உரிமை, பாதுகாப்பு உரிமை தொடர்பான பல முன்னேற்றகரமான விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. இங்கு முக்கிய விடயம், ஜனாதிபதி இது தொடர்பில் ஒரு காரியாலயத்தை அமைத்திருந்தார் (2016, Tiainen). இது கொள்கைகள் அமுலாக்கம் தொடர்பில் கண்காணிக்கின்ற அலுவலகமாகச் செயற்பட்டிருந்ததாகும்.

அடுத்து அமெரிக்காவின் நிலை தொடர்பில் நோக்குவோமாயின், இரு தசாப்தங்களிற்கு முன்னர் இந்நாடு 52ஆவது நிலையில் இருந்தது. இன்று 102 ஆவது இடத்திற்கு பின்னோக்கிச் சென்றிருக்கின்றது (2017, Odette). இந்நாட்டில் உள்ள தேர்தல் முறைமை (First – past- the – post) மற்றும் ஒரு மாவட்டத்தில் இருந்து ஒருவர் தேர்வு செய்யப்படுகின்ற முறைமை ஆகும். குறித்த இத் தேர்தல் முறைமை ஆண் வேட்பாளர்களுக்கு சாதகமாக உள்ளதாகக் கூறப்படுகின்றது. தவிர, இரு பிரதான கட்சிகளும் வேட்பாளர் பட்டியலில் 50 வீதம் பெண்களுக்கு ஒதுக்குகின்ற முறைமை உள்ளதே தவிர பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக்கொள்வதற்கான கோட்டாமுறைமை இல்லாமை, தேர்தல் பிரச்சாரங்களுக்காக அதிக பணம் தேவையாக உள்ளமை, குடும்ப வேலை மற்றும் நேரம் இன்மை, மற்றும் ஆண்களுக்கு சார்பானதாக உள்ள அரசியல் கலாசாரம், மாற்றத்தை அரசியலால் சாதிக்க முடியும் என்பதில் பெண்கள் குறைவான நம்பிக்கை கொண்டிருத்தல் என்பன காரணங்களாகக் கூறப்படுகின்றன (2017, Odette).

பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் தொடர்பில் இந்தியாவின் நிலையினை நோக்குகின்ற போது, 70 ஆண்டுகளுக்குமேல்

பழமைவாய்ந்த சுதந்திர இந்தியாவில், பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் திருப்திகரமானதாக இல்லை. ஆயினும், பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் இன்னும் அதிகரிக்கப்பட வேண்டும் என்பதனை கொள்கையளவில் ஏற்றுக்கொண்டுள்ள இந்தியா, அண்மைக்காலத்தில் இதுதொடர்பில் கவனம் செலுத்தி வருவதனை அவதானிக்க முடிகின்றது. நாட்டின் மொத்த சனத்தொகையில் அரைப்பங்கினரை அரசியலில் இருந்து விலக்கி வைத்துவிட்டு மிகப்பெரிய ஜனநாயக நாட்டிற்கு உரிமை கோர முடியாது. இந்தியாவில், பெண்களின் குறைந்தளவான எழுத்தறிவு வீதம் (65), வீட்டுக்கடமைகள் மற்றும் பிள்ளைப் பராரிப்பு பெண்கள் மீது சுமத்தப்படுதல், பெண்களின் அரசியல் விழிப்புணர்வு குறைந்த மட்டத்தில் காணப்படுதல், குறைவான பொருளாதார உதவிகள், சமூக மற்றும் கலாசார விழுமியங்கள் ஆகியன பெண்களின் அரசியல் பிரதிநிதுத்துவத்தில் தாக்கம் செலுத்துகின்றன. அத்துடன் பெண்களுக்கான 33வீத இடஒதுக்கீடு கட்சிகளின் கருத்து வேறுபாட்டினால் செயல்வடிவம் பெறவில்லை (Begum Sabina, 2015).

பாகிஸ்தானைப் பொறுத்தமட்டில், அரசியல் யாப்பு ரீதியாகப் பெண்களுக்கு சமத்துவம் வழங்கப்பட்டுள்ளது. ஆயினும், நடைமுறையில் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் சவால் மிக்கதாகவே உள்ளது. பெண் அரசியல் தலைமைகள் கொல்லப்படுதல் (2007 இல் முன்னால் பிரதமர் பெனாசீர் பூட்டோ கொல்லப்பட்டமை) பெண்களுக்கு சர்வதேச பிரகடணங்கள் மற்றும் அரசியல் யாப்பு வழங்கிய உரிமைகளை நடைமுறைப்படுத்துவதில் காட்டப்படும் காலதாமதம், அரசியல் குழப்பகர நிலைமை, அரசியலில் இராணுவத்தின் ஆதிக்கம், ஆணாதிக்கம், மத ரீதியான தவறான எண்ணக்கரு போன்றவை பாகிஸ்தானில் பெண்கள் அரசியல் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக்கொள்வதற்கு சவாலான விடயங்களாக அடையாளப்படுத்தப்படுகின்றன (Shabana & Akhtar 2017). 2002 இல் பெண்களுக்கான கோட்டா முறைமை (20 வீதம் கட்சிகளின் மூலமாக அன்றி தேர்தலில் போட்டியிட்டு அல்ல) அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. ஆயினும், அது அரசியல் பின்புலம் மிக்கவர்களுக்கே சாதகமாக அமைந்திருந்தது (Awan Mohamed Ali , 2016). தவிர வாக்காளர் பதிவில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் பாரிய இடைவெளி காணப்படுகின்றமை வாக்களிக்கும் பெண்களின் வீதம் குறைவு, ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனியான வாக்குச் சாவடி இன்மை, வீட்டிலிருந்து வாக்குச் சாவடிகளுக்கான தூரம் அதிகம் என்பனவும் காரணங்களாகக் கூறப்படுகின்றன (Awan Mohamed Ali , 2016).

## 7. முடிவுரை:

உலக நாடுகளின் அனுபவங்களின் அடிப்படையில் நோக்குகின்ற போது, பொதுவாக எல்லா உலக நாடுகளிலும் காணப்படுகின்ற பொதுவான பண்பு ‘‘அரசியல் என்பது ஆணாதிக்கத்திற்கு உட்பட்டது’’ என்பதே ஆகும். 1994ஆம் ஆண்டிற்குப்

பின்னர், இவ்விடயம் குறித்த விழிப்புணர்வு உலக நாடுகளில் ஏற்படுத்தப்பட்டு அரசியலில் பெண்கள் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதில் சில நாடுகள் முன்னேற்ற நிலையினை அடைந்திருக்கின்றன. இன்று உலக நாடுகளின் பெண்கள் பிரதிநிதித்துவத்தின் சராசரி வீதம் 23 ஆகும். ஆயினும் எதிர்பார்க்கை 50 வீதமாகும் (Begum Sabina 2015).

அதேவேளை, எந்தவொரு நாட்டிலும், படிமுறை வளர்ச்சி என்ற ரீதியில், பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் அதிகரித்து வந்திருப்பதற்கான சான்றுகளை அவதானிக்க முடியவில்லை. மறுபுறம், விசேடமாக பெண்களுக்கான கோட்டா முறைமை அறிமுகப்படுத்தப்பட்டே பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட்டிருக்கின்றது என்பது முக்கிய விடயமாகும்.

இப்பின்னணியில், இலங்கையில் பெண்களின் பிரதிநிதித்துவம் தொடர்பில், நோக்குகின்றபோது தற்போதைய பாராளுமன்றத்தில் 6 வீதத்திற்கும் குறைவான பெண்களே பிரதிநிதித்துவத்தைப் பெற்றிருக்கின்றனர். அதாவது பாராளுமன்றத்தில் உள்ள 225 உறுப்பினர்களில் 13 உறுப்பினர்களே பெண்களாவர் (Daisy 2018). கடந்த பாராளுமன்றத்திலும் பெண் பிரதிநிதிகளின் எண்ணிக்கையும் பதின்மூன்றே ஆகும் (Daisy 2018). இந்நிலையில், இலங்கையில் 2017இல் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றங்களிற்கான தேர்வில், பெண்களிற்காக 25வீதம் இட ஒதுக்கீடு இடம்பெற்றிருந்தது. இது எதிர்காலத்தில் மாகாணசபை மற்றும் பாராளுமன்றப் பிரதிநிதிகள் தேர்விலும் இடம்பெற வேண்டியது அவசியமானதாகும். தெற்காசிய நாடுகளில், இலங்கையில் பெண்களின் எழுத்தறிவு வீதம் உயர்ந்த மட்டத்தில் உள்ளது என்பதும் இங்கு குறிப்பிட்டுக்கூறக்கூடிய அம்சம். ஏனெனில், தெற்காசிய நாடுகள் பலவற்றில் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கு, எழுத்தறிவு பாரியதொரு தடையாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

இவைதவிர, பெண் வாக்காளர்களின் வாக்களிப்பு நடத்தை கணவர் மற்றும் தந்தை ஆகியோரினாலேயே பெரிதும் தீர்மானிக்கப்படுகின்றன. இதுவும் பெண்களின் பிரதிநிதித்துவத்தில் பாதிப்புச் செலுத்துகின்றது. மட்டுமன்றி, கலாசார, பண்பாட்டு அம்சங்கள், வீட்டுக் கடமைகள், பிள்ளை வளர்ப்பு மற்றும் இறுக்கமான மதக் கோட்பாடுகளின் தாக்கமும் இலங்கையில் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தில் தாக்கம் செலுத்துகின்றன என்பதை மறுப்பதற்கில்லை.

இலங்கையில் இன்று பெண்களின் அரசியல் பிரதிநித்துவம் பின்னடைந்த நிலையில் இருக்கின்றது என்பது தொடர்பான விழிப்புணர்வு சகல மட்டங்களிலும் ஏற்பட்டிருக்கின்றன. இதனடிப்படையில், பல பெண்கள் அமைப்புக்கள் தமது செயற்பாடுகளை பாரியளவில் முன்னெடுத்து வருகின்றனர். ஆயினும், பாரியளவில் எந்தவொரு மாற்றத்தினையும் அடைந்துவிடவில்லை. உலக நாடுகளிலும் ஏறக்குறைய இரு தசாப்தங்களின் முன்னர் இதே நிலையே காணப்பட்டிருந்தது. ஆயினும்,

பல நாடுகள் இது தொடர்பில் விழித்துக்கொண்டன. பொறிமுறை ரீதியான மாற்றங்களை ஏற்படுத்தி, பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தைதினை குறித்த மட்டத்தில் பேணிக்கொண்டு வருகின்றன.

மறுபுறம், பாகிஸ்தான் கோட்டா முறையினை அறிமுகப்படுத்தி, பெண்கள் தேர்தலில் போட்டியிடாமல், கட்சி சார்பில் நியமிக்கின்ற முறையினை நடைமுறைப்படுத்தியிருந்தது. இம்முறைமை, ஏற்கனவே அரசியலில் செல்வாக்குப் பெற்றிருக்கின்ற குடும்பங்களில் இருந்து பெண்கள் பிரநிதித்துவத்தைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பையே ஏற்படுத்தியிருந்தது. உண்மையில், பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற இலக்கு மழுங்கடிக்கப்படுவதற்கான வாய்ப்பையே இது ஏற்படுத்தியிருந்தது.

உலகில் பொஸ்னியா, ஹெர்ஸிகோவினா, புருனே, ஹங்கேரி, பாகிஸ்தான், சவூதிஅரேபியா, ஸ்லோவாக்கியா, ரொங்கா மற்றும் வனுவாட்டு குடியரசு ஆகியநாடுகளில் அமைச்சரவையில் பெண்கள் எவரும் இடம்பெறாத நிலைமை உள்ளமையும் நோக்கத்தக்கது. இந்நிலைமை தனியே பாராளுமன்றத்திற்கு தெரிவாகின்ற பெண்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் மாத்திரம் கவனம் செலுத்துகின்ற போக்கிற்கு இட்டுச்செல்கின்றது. தீர்மானம் மேற்கொள்வதில், அதனை நடைமுறைப்படுத்துவதில் பெண்களின் பங்களிப்பு இடம்பெறுகின்ற வகையிலேயே பெண்களின் அரசியல் பிரதிநித்துவம் நோக்கப்படுதல் வேண்டும். இத்தகைய அம்சங்களையும் உள்ளடக்கும் வகையில் இலங்கையில் பெண்கள் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கான பொறிமுறை ஏற்படுத்தப்படுதல் வேண்டும். ஆயினும், இவ்விலக்கை அடைவதற்கு இலங்கை இன்னும் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியது என்பதே யதார்த்தமாகும்.

**உசாத்துணை நூல்கள்**


1. லியனகே கமலா (2012), ***இலங்கையில் உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம்: சவால்களும் எதிர்பார்ப்புகளும்***, ப்ரெட்ரிச் ஈபர்ட் ஸ்டிப்டுங், கொழும்பு - 04
2. Awan Mohamed Ali (2016), ***Political Participation of Woman in Pakistan,*** FGI Publication, URL Available on: http://www.ffgi.net/files/dossier/polpart-pakistan-awan.pdf, Access on 12.05.2018
3. Begum Sabina (2015), ***Political Participation of Woman: Some Issues and Challenges,*** International Journal of Applied Research, URL Available on: http://www.allresearchjournal.com/archives/2015/vol1issue11/PartG/1-10-142.pdf, Access on 12.05.2018
4. Chalaby Odette (2017), ***Ranked and Mapped: Which countries have the most women in Parliament,*** URL Available on: https://apolitical.co/solution_article/

which-countries-have-most-women-in-parliament/, Access on 15.07.2018

5. Cooper Jane Sarah (2016), ***Rwanda: Woman's Political Participation in Post – Conflict State – Building,*** URL Available on: http://www.oxfordhandbooks.com/ view/ 10.1093/oxfordhb/9780199300983.001.0001/oxfordhb-9780199300983-e-45, Access on 10.07.2018
6. Daisy R. (2018), ***Women's Representation and Participation in Formal Politics***, Groundview Journalism for Citizens, URL Available on: https://groundviews.org /2018/06/10/womens-representation-and-participation-in-formal-politics/, Access on 01.06.2018
7. Inter- Parliamentary Union (2018), ***Woman in National Parliament: World Classification***, URL Available on: http://archive.ipu.org/wmn-e/classif.htm, Access on 26.08.2018
8. Shabana S.G.K., Akhtar H. (2017), ***Women representation in Pakistani Legislatures: A study of 2002, 2008 and 2013 General Elections***. URL Available on: https://journals.sagepub.com/doi/abs/ 10.1177/0971523116679785 Access on 10.06.2018
9. Tiainen R. (2016), ***Gender Quotas in South Africa***, Lund University, URL Available on: http://lup.lub.lu.se/luur/download?func=downloadFile&recordOId=8948592& fileOId= 8948594, Access on 08.06.2018
10. Woman in Parliament (2018), ***World Classification table,*** URL Available on: http://archive.ipu.org/wmn-e/classif.htm, Access on 02.07.2018
11. World Bank (2016), ***Sri Lanka, Population Female,*** URL Available on: https://tradingeconomics.com/sri-lanka/population-female-percent-of-total-wb-data. html, Access on 15.07.201